www.padippakam.com

# கண்ணீர் பூக்களால் வீர அஞ்சலி!



## அஞ்சா நெஞ்சன் TELO தலைவர் சிறீ சபாரத்தினமே!

## சிறையில் சிக்காத சிங்கம் "சிறீசபாரத்தினத்தின் வீர வரலாறு".

(தோற்றம் : 28-8-52 — மறைவு : 6-5-86)

தமிழ் ஈழத் தாயகம் மீட்க இளவயதினிலே புறப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையிலே சிங்கள இனவெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், ...... போன்றோரால் பயிற்றுவிக்கப்பட்டு, அவர்கள் வீரமரணம் அடைந்த பின்னர் டெலோ இயக்கத்தை கட்டி வளர்த்து பல ஆயிரக்கணக்கான பயிற்சி பெற்ற போராளிகளை உருவாக்கி, சிறிலங்கா அரசு கூலி பட்டாளத்தை, தன்னுடைய மிகப் பெரிய திட்டங்கள் மூலமும் தாக்குதல்கள் மூலமும் நடுநடுங்க வைத்த மாவீரனே!

தமிழீழத்திற்குச் சென்று அங்கு போராட்ட முன்னெடுப்புக்களை கவனித்து, மக்களுடன் பழகி அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து சிறீலங்கா அரசுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதல்களை மேற்கொண்டாய் தொடர்ந்தாய்..........

இக்கணத்தை தன் கணமாக நினைத்து துரோகி விடுதலைப்புலி பிரபாகரனும், அவனது கொலைக்கும்பலும் சகுனியைய தம்மகத்தே வைத்து சதிவலை வீசி உன்னையும் உன் ஆதரவாளர்களையும் கொன்ற சேதி கேட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம்.

சிறீசபாரத்தினமே! உனக்கா இந்த நிலைமை, தமிழகத்தில் இருந்து பிரபாகரனைப் போல் கட்டளையிடாமல் தாயகமாம் தமிழீழம் சென்று, மக்களுடன் மக்களாக, தோழருடன் தோழராக எளிமையாக வாழ்ந்து, தமிழ் ஈழத்திற்காக உன் விலைமதிப்பற்ற உயிரையே தானமாக தந்த அஞ்சா நெஞ்சனே!

உனக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

**சிறீலங்க முதலாளித்துவ அரசுக்கெதிராக டெலோவினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் சில,**

- ★ சரித்திரப்புகழ் பெற்ற சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலில் 60 பொலிசாரையும் கைதடியில் வைத்த கண்ணி வெடியில் 70 சிங்கள இராணுவத்தினரையும், எழுதுமட்டுவாளில் 40 இராணுவத்தினரையும் சங்காரம் செய்து ஒரே நாளில் சிறீலங்கா அரசை நடுநடுங்க வைத்தது.
- ★ முறிகண்டி எனுமிடத்தில் யாழ் தேவி ரயிலை வழிமறித்துத் தாக்கியதில் அதில் பயணம் செய்த 300 க்கு மேற்பட்ட சிங்கள கூலிப்பட்டாளம் முற்றாக அழித்தமை.
- ★ கொக்காவில் இராணுவமுகாமில் நேரடி மோதலில் ஒன்பது ரெலோஸ்களை இழந்து ஐம்பது இராணுவத்தை கொன்றமை.
- ★ வவுனியா போலீஸ் ஸ்டேசனில் 75 அதிரடிப்படையினரையும் ஒரு ஹெலிகொப்டரையும் சுட்டு வீழ்த்தியமை.
- ★ 55 இராணுவ வீரர்களை குறிஞ்சதீவு எனுமிடத்தில் நேரடி மோதலில் ஈடுபட்டு டெலோ பகுதியில் எந்த வித தேசமுமின்றி கொலை செய்தமை.
- ★ கடற்படையினரை கடற்கண்ணி வெடி வைத்து தகர்த்தும், தமிழீழ மக்களை சிறிலங்கா பாஸிச அரசிடம் இருந்தும் காப்பாற்றிக் கொண்டிருக்கும் வேளையில்,

சிறிசபாரத்தினமே நீ மக்களுடன் ஒன்றுபடும் நிலை கண்டும், உனது செயல் திறன் கண்டும், ஆற்றொணாத் துயரங் கொண்டு பதவியெனும் மோகத்தினால், சகுனியுடன் சேர்ந்த பிரபாகரன் உன்னை மண்ணோடு மண்ணாக்க நினைத்தான்.

ஆனால் நீ மாண்ட மண்ணோ தமிழீழம் எனும் பூமியுடன் இணைந்து உன் இலட்சிய வாழ்வுக்கே வரலாறாக அமைந்து விட்டது.

மரணத்தில் தொடங்கும் வாழ்வே இலட்சிய வாழ்க்கை.

—பிடெல் காஸ்ரோ.

## யார் இந்த பிரபாகரன்?

டெலோவின் மூத்த தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன்,... போன்றோரை சிறீலங்க இனவெறி அரசிற்கு காட்டிக் கொடுத்த தமிழினத் துரோகி.

தொடர்ந்து ஏனைய இயக்க தலைவர் தோழர்களான;

- ★ மைக்கல் செல்வம் கொலை ★ சுந்தரம் கொலை.
- ★ சென்னை பாண்டிபஜாரில் பிளாட் தலைவர் உமா மகேஸ்வரன் கொலை முயற்சி.
- ★ டெலா இயக்கத்தலைவர் தேவன் கொலை
- ★ மனோமாஸ்டர் கொலை ★ டெலி இயக்கத்தலைவர் ஜெகன் கொலை.
- ★ முன்னாள் கோப்பாய், உருவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் கொலை
- ★ EPRLF வவுனியா பொறுப்பாளர் றீகன், போராளிகள் அமீன் மற்றும் 9 போராளிகள் கொலை.
- ★ இன்று டெலோ தலைவர் சிறீசபாரத்தினம் கொலை.

தமிழக மண்ணிலே சகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டு காட்டு மிராண்டித்தனமான இந்த நடவடிக்கைகளை தூண்டிவிடும் உன்னை தொடர்ந்தும் இனி நாம் அனுமதிப்பதென்றால் தமிழக மக்கள் என்ன அவ்வளவு முட்டாள்களா?

தமிழ் ஈழம் மலரவேண்டுமென்று ஆவலுடன் காத்திருக்கும் எமது கனவுகளை சின்னாபின்னமாக்கும் உன்னை சின்னாபின்னமாக்கிவிட்டு, ஈழ விடுதலையை வென்றெடுக்க எங்களால் ஆன சகல ஆதரவுகளையும் ஏனையோருக்கு வழங்க பின்னிற்க மாட்டோம்.

சர்வாதிகாரி பிரபாகரனே, தமிழகத்தை விட்டு உடனே உன் கொலை வெறிக்கும்பலுடன் வெளியேறு இல்லையேல் நாம் வெளியேற்றுவோம்.

—இந்திய ஈழ நட்புறவுக் கழகம்

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ ரத்தினமே !

## சபாரத்தினம்



தமிழ் மக்களின் ஓரே உன்னத தலைவரும் இணைந்த இயக்கங்களின் இணையற்ற தள நாயகருமான தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் சிறீ சபாரெத்தினம் அவர்கள் 06-05-1986 செவ்வாய் அன்று, தனி நபர் பயங்கரவாதக் குழுவான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் சுற்றி வளைக்கப்பட்ட போது, போராடி வீர மரணமடைந்தார்.

எம் தலைவா !
இயக்கத்தின் ரத்தினமே !
சிறீ. சபாரத்தினம் !
நின் மறைவால் விழியில்
நீர் நிறைந்தாலும் !
நின் மறைவால் நெஞ்சில்
கனம் சேர்ந்தாலும் !
ஈழத்தின் வெற்றிக்கு
நாளும் நின்று—நீ
நம் நாட்டுச் சரித்திரத்தை
கடமை தன்னை !
நாளாந்தம்சொன்னசொற்கள்
காதில் இன்னும் ஓயாமல் !
ஒலிக்குதய்யா !
என்றாலும் தான்
உன் பேரிழப்பை ஈடு செய்ய
என்ன செய்வோம் நாங்கள்?
ஒன்று மட்டும் சத்தியம் !
நீ மறைந்தால் தானுடனே
இயக்கம் சாகும்—என்று
மாறுகக் கணக்கிட்டார்
கயவர் இன்று
குலத்தைக் கெடுக்க வந்த
கோடாரிக் காம்பே போல்
குறுமதியர் செய்திட்டார்
படுபாவம் புரிந்திட்டார்
எம் இறைவா ! உன்னை
வஞ்சித்தார்
நீ மறைந்த இந்நாளில்
ஓயாமல் சூளுரைகள்
தந்தோம் அண்ணா !
நீ சொன்ன சொற்கள்
எம் நெஞ்சில் !
நீ எடுத்த துப்பாக்கி
எம் கையில் !
தமிழீழ விடுதலை கிட்டும் வரை
போராட்டம் ஓய்வதில்லை
அதுவரையில் நீ கண்ட
தமிழீழ விடுதலை இயக்கமும்
ஓய்வதில்லை !

நின் பாதையில் தொடர்ந்து நடைபோடும்
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(TELO)
பம்பாய் கிளையகம்

படிப்பகம்